**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 275 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளுக்கு அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ள மின்நூல்கள் உட்பட இதர மின்நூல்களை இணைய வழியில் படிப்பதற்கு ஏதுவாக கணினி மற்றும் இதர உபகரணங்கள் எல்காட் மூலம் வாங்கி வழங்க நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை**

**அரசாணை (நிலை) எண்.51** | **நாள் 01.07.2022**
**சுபகிருது, ஆனி 17**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**

**படிக்கப்பட்டது:**

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.சி3/3025/2022, நாள் 04.05.2022.

* * * * * *

**ஆணை:**

2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது "கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ள மின்நூல்கள் உட்பட இதர மின்நூல்களை இணைய வழியில் படிப்பதற்கு ஏதுவாக ஒரு நூலகத்திற்கு ரூ.80,000 செலவில் 275 கல்லூரி விடுதிகளுக்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்கி வழங்கப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், அரசாணை (4டி) எண்.7, பள்ளிக் கல்வி (பொ.நூ.2)த்துறை, நாள் 30.12.2021–ல் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு அச்சு நூல்கள், மின்நூல்கள், இணைய வழி மின் பருவ இதழ்கள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்யவும், நூலகத்தின் உறுப்பினர்கள் நூலகத்தில் மட்டும் அல்லாமல் அவர்களது வீடு, இருப்பிடம் மற்றும் எவ்விடத்திலிருந்தும் பயன்படுத்தும் வசதி (Off Campus Access) ஏற்படுத்திட ஏதுவாக இணைய வழி குறிப்புதவிப்பிரிவு ஏற்படுத்திடவும், ஆணையிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, அதன் அடிப்படையில், இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 275 கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயின்று வரும் மாணாக்கர்கள், கணினி

மூலம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ள மின்நூல்கள், இணைய வழி மின் பருவ இதழ்கள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவற்றை விடுதி அமைந்துள்ள இடத்திலிருந்து பயிலும் வசதியை ஏற்படுத்த தேவையாக கணினி உள்ளிட்ட இதர உபகரணங்களை எல்காட் மூலம் ரூ.2,13,18,275/- (ரூ.77,521 x 275 விடுதிகள்) செலவில் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இக்கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று, இத்துறை மூலம் செயல்படும் 275 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளுக்கு அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ள மின்நூல்கள் உட்பட இதர மின்நூல்களை இணைய வழியில் படிப்பதற்கு ஏதுவாக கணினி மற்றும் இதர உபகரணங்கள் எல்காட் மூலம் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும், ஒரு விடுதிக்கு கணினி உட்பட இதர உபகரணங்களை வாங்குவதற்கான செலவினம் ரூ.77,521/- வீதம் 275 கல்லூரி விடுதிகளுக்கு தேவைப்படும் மொத்த செலவினமான ரூ.2,13,18,275/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே பதிமூன்று இலட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்று எழுபத்தைந்து மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது. மேலும், இவ்வாண்டில் ஒரு மூன்றாம் தரப்பு நிறுவனம் (Third Party Agency) மூலம் இத்திட்டத்தின் பயன்பாட்டினை மதிப்பீடு செய்து பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசிற்கு அறிக்கை அளிக்க வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**பிற்படுத்தப்பட்டோர் நலன்**

(146 விடுதிகள் x ரூ.77,521 = ரூ.1,13,18,066/-)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277- கல்வி - மாநிலச் செலவினங்கள் - AA பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் - 376 கணினியும் துணைப் பாகங்களும் 01 - வாங்குதல்.

(IFHRMS த.தொ.கு. 2225-03-277-AA-37601)

**மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்**

(95 விடுதிகள் x ரூ.77,521 = ரூ.73,64,495/-)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277- கல்வி- மாநிலச் செலவினங்கள்- BC - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் - 376 கணினியும் துணைப் பாகங்களும் 01 - வாங்குதல்.

(IFHRMS த.தொ.கு. 2225-03-277-BC-37601)

**சீர்மரபினர் நலன்**

(20 விடுதிகள் x ரூ.77,521 = ரூ.15,50,420/-)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 80-பொது 101 - சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் - மாநிலச் செலவினங்கள் AF - சீர்மரபினர் மாணவர் இல்லங்களும் உணவு இல்லங்களும் 376 - கணினியும் துணைப் பாகங்களும் 01 - வாங்குதல்

(IFHRMS த.தொ.கு. 2225-80-101-AF-37601)

**சிறுபான்மையினர் நலன்**

(14 விடுதிகள் x ரூ.77,521 = ரூ.10,85,294/-)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 04 - சிறுபான்மையினர் நலன் 277 - கல்வி - மாநிலச் செலவினங்கள் JB - சிறுபான்மையினர் மாணவரில்லங்கள் - 376 - கணினியும் துணைப் பாகங்களும் 01 - வாங்குதல்

(IFHRMS த.தொ.கு. 2225-04-277-JB-37601)

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் ரூ.2,13,18,275/-ம் 2022-2023 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2022-2023 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதி [பி,மிபி(ம)சி.ந/வ.செ.பொ.-I]த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண். 31715/நிதி(பி,மிபி(ம)சிந)/2022, நாள் 30.06.2022-ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0562 (ஐந்நூற்று அறுபத்து இரண்டு) (IFHRMS ASL No.2022060562)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை-5.

மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை– 1.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

<u>நகல்:</u>
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலன், சென்னை– 5.
இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை–5.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை– 9.
நிதி (பி, மி.பி (ம) சி.ந/வ.செ.பொது I/II/வ.வ.1)த்துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**